**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.121/2022
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சேதுராமன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of September 2023.

21.09.2023

(1ம் எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 29.12.2020ம் தேதி காலை 07.00 மணியளவில் எனது மனைவி ராணி தேநீர் வாங்குவதற்காக தேநீர் கடைக்கு சென்றார். அப்போது எனது மகள் வாழாமல் போனதற்கு நீ தான்டி தேவிடியா காரணம் என 1ம் எதிரி ஜப்பான் என்ற முனியசாமி, 1ம் எதிரியின் மகன் முருகன், முத்துலெட்சுமி, 2ம் எதிரி பழனியம்மாள், 3ம் எதிரி முத்துமாரி, 4ம் எதிரி முனியக்காள் ஆகியோர் சேர்ந்து எனது மனைவி ராணியை அடித்து மண்டையை உடைத்து கீழே தள்ளிவிட்டுள்ளார்கள்.

2) அப்போது கிழவன் என்பவர் என்னிடம் வந்து எனது மனைவி எதிரிகள் அடித்து கீழே தள்ளியதாக கூறியவுடன் நான் சம்பவ இடத்திற்கு சென்று ஏன் எனது மனைவி அடித்தீர்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரி எனது முதுகில் அடித்தார். முருகன், த.பெ. முனியசாமி, 3ம் எதிரி முத்துமாரி, 4ம் எதிரி முனியக்காள், முத்துலெட்சுமி, த.பெ.முனியசாமி ஆகியோர் என்னை அடித்தார்கள். நான் அதில் கீழே விழுந்துவிட்டேன். அதில் உடல் முழுவதும் எனக்கு காயம் ஏற்பட்டது. உடனே 108

ஆம்புலன்ஸ் மூலமாக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மனைவியும் சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.121/2022
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : கிழவன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of September 2023.

21.09.2023

(1ம் எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 29.12.2020ம் தேதி சுமார் 06.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் ராணியை வழிமறித்து தேவிடியா முண்டை என்று பேசினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகள் ராணியை கம்பால் அடித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகள் அசா.1யை கம்பால் கையில் அடித்து உடல் முழுவதும் வீக்க காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது.

2) பின்பு எதிரிகள் அனைவரும் அசா.1யை பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சண்டையை நேரில் பார்த்து விலக்கிவிட்டதாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.121/2022
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : மருதநாயகம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of September 2023.

21.09.2023

(1ம் எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 29.12.2020ம் தேதி சுமார் 06.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் ராணியை வழிமறித்து தேவிடியா முண்டை என்று பேசினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகள் ராணியை கம்பால் அடித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகள் அசா.1யை கம்பால் கையில் அடித்து உடல் முழுவதும் வீக்க காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது.

2) பின்பு எதிரிகள் அனைவரும் அசா.1யை பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சண்டையை நேரில் பார்த்து விலக்கிவிட்டதாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.